**(Under Section 173 BNSS)"**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082890

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **01/2025** Date: நாள் **24.01.2025**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 (b)**

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை **08.01.2025 at about 11.00 hrs 21.01.2025 at about 14.00 hrs and 23.01.2025 at about 13.20 hrs**

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **24.01.2025** Time : நேரம் **08.30 hrs**

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **24.01.2025** Time : நேரம் **09.00 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **About 7 Kms North**

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **VAO Office, Muthusamypuram Village, Thoothukudi Taluk**

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.கோ.சுதாகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவில்பிள்ளை

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி 98, வடக்குத்தெரு, மடத்துப்பட்டி, கீழத்தட்டப்பாறை அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.எட்டுராஜ், கிராம நிர்வாக அலுவலர், முத்துசாமிபுரம் மற்றும் வடக்கு சிலுக்கன்பட்டி கிராமம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...J.Anitha........ Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

J. Anitha 24/01/25
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: **24.01.2025 at 09.50 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........ **J. ANITHA**
Rank: நிலை ..................... No. எண் ..........
Inspector of Police,
V&AC, Thoothukudi

**Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.01/2025**

**பணிந்து அனுப்பப்படுகிறது.**

இன்று 24.01.2025-ம் தேதி காலை 08.30 மணிக்கு J.அனிதா, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்டம், கீழத்தட்டப்பாறை அஞ்சல், மடத்துப்பட்டி, வடக்குத்தெரு கதவு எண்.98 என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு.கோ.சுதாகர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவருக்கு சொந்தமான முத்துசாமிபுரம் கிராமம் புல எண் 43/5C-ல் அமைந்துள்ள 2 ஏக்கர் 68 சென்ட் புஞ்சை நிலத்திற்கான உண்மை தன்மை குறித்து அறிக்கை அளித்ததற்காக முத்துசாமிபுரம் மற்றும் வடக்கு சிலுக்கன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் திரு.எட்டுராஜ் அவர்கள் ரூ.5,000/- லஞ்சம் கேட்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட முத்துசாமிபுரம் மற்றும் வடக்கு சிலுக்கன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் திரு.எட்டுராஜ் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 01/2025 பிரிவு 7(b) of PC Act, 1988 as Amended in 2018-படி 24.01.2025-ம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் : K.சுதாகர், வயது 70, த/பெ.A.கோவில்பிள்ளை நாடார், 98, வடக்குத்தெரு, மடத்துப்பட்டி, கீழத்தட்டப்பாறை அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம். செல் : 9362121216. பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 1996-ம் ஆண்டு தூத்துக்குடி வட்டம்,

முத்துசாமிபுரம் கிராமம் புல எண் 43/5C-ல் அமைந்துள்ள 2 ஏக்கர் 68 செண்ட் புஞ்சை நிலத்தை கிரையத்திற்கு வாங்கியிருந்தேன். மேற்படி இடத்திற்கு என் பெயரில் பட்டா எண்: 62-ன் படி தனி பட்டாவாக பெற்றுள்ளேன். இந்நிலையில் மேற்படி இடத்தை விற்பனை செய்துவிடலாம் என்று எண்ணி மேற்படி இடத்திற்கான வழிகாட்டி மதிப்பு குறித்து இணையவழியில் பார்வையிட்ட போது அதன் மதிப்பு "0" என்று இருந்தது. எனவே நான் அது குறித்து புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் சென்று விசாரித்த போது அவர்களது அலுவலக ஆவணத்தில் மேற்படி நிலமானது அரசு நிலம் என்று உள்ளதாக கூறினார்கள். நான் அவர்களிடம் மேற்படி இடத்திற்கு என் பெயரில் தனி பட்டா வாங்கியுள்ள விபரத்தை கூறினேன். அவர்கள் அப்படியென்றால் சரி மேற்படி இடத்திற்கு மதிப்பு உண்மை தன்மை வழங்கும்படி கேட்டு ஒரு மனு கொடுங்கள் என்று கூறினார்கள். அதன் பேரில் நான் 26.11.2024ம் தேதியன்று புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி என்னுடைய இடத்திற்கு மதிப்பு உண்மை தன்மை வழங்கும்படி கேட்டு மனு கொடுத்தேன். அவர்கள் அதனை பெற்றுக்கொண்டு மேற்படி மனுவினை தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும், தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மேற்படி என்னுடைய இடம் தொடர்பாக உண்மை தன்மை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்கள். பின்னர் நான் மேற்படி மனு குறித்து தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் சென்று விசாரித்த போது மேற்படி மனுவினை விசாரணைக்காக முத்துசாமிபுரம் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பியுள்ளதாக கூறினார்கள். அதன் பின்னர் நான் 08.01.2025ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் முத்துசாமிபுரம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.எட்டுராஜ் அவர்களை சந்தித்து என் மனு மீதான நடவடிக்கை குறித்து கேட்டேன். அப்போது அவர் என்னிடம் உங்கள் மனு தொடர்பாக அறிக்கை தயார் செய்து விட்டேன் என்று கூறி அந்த அறிக்கையினை என்னிடம் காண்பித்தார். அப்போது நான் அந்த அறிக்கையினை எனது செல்போனில் புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டேன். பின்னர் அவர் என்னிடம் மேற்படி அறிக்கை தயார் செய்ததற்காக அவருக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். அப்போது நான் அவரிடம் சார் அவ்வளவு ரூபாய் தற்போது என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் சரி நான் இப்போது இந்த அறிக்கையை தாலுகா

அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விடுகிறேன். ஆனால், பின்னர் நீங்கள் ரூபாயை ரெடி பண்ணி கொடுத்துவிட வேண்டும் என்று கூறினார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் திரு.எட்டுராஜ் அவர்கள் இரண்டு மூன்று முறை செல்போனில் தொடர்பு கொண்டு நேரில் பார்க்க வருமாறு அழைத்தார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததினால் நான் அவரை சந்திப்பதை தவிர்த்து வந்தேன். இந்நிலையில் 21.01.2025ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் திரு.எட்டுராஜ் அவர்கள் அவரது செல்போன் எண் 9789391772-ல் இருந்து எனது செல்போன் எண் 9362121216-ற்கு போன் செய்து நான் கேட்ட ரூ.5,000/-யை கொடுக்காவிட்டால் பின்னாளில் நீங்கள் VAO அலுவலகத்தில் எந்த ஒரு வேலையையும் முடிக்க முடியாது என்று கூறினார். நான் உடனே அவரிடம் சார் நான் வெளியில் இருக்கிறேன் பிறகு உங்களை நேரில் வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். அவரும் சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பின்னர் 23.01.2025ம் தேதி மதியம் சுமார் 01.20 மணியளவில் நான் திரு.எட்டுராஜ் அவர்களை சந்திப்பதற்காக அவரது அலுவலகத்திற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது அவர் அவரது செல்போன் எண் 9789391772-ல் இருந்து எனது செல்போன் எண் 9362121216-ற்கு தொடர்பு கொண்டு பேசினார். அப்போது நான் அவரிடம் சார் உங்களை பார்ப்பதற்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன் அலுவலகத்திற்கு பக்கத்தில் வந்துவிட்டேன் என்று கூறினேன். அவரும் சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டார். நான் அங்கு சென்ற போது திரு.எட்டுராஜ் அவர்கள் அவரது அலுவலகத்திற்கு வெளியில் நின்று கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று சார் ஏதாவது குறைத்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்டேன். அதற்கு அவர் மற்றவர்களிடம் எல்லாம் இன்னும் அதிகமாக வாங்குவேன் உங்களுக்காகத் தான் ரூ.5,000/- என்று சொல்லியுள்ளேன், ரூபாய் ரெடி பண்ணிவிட்டீர்களா என்று கேட்டார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சார் நாளை ரெடி பண்ணி தந்துவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நாளை மறக்காமல் கொண்டுவந்து கொடுத்துவிடுங்கள் என்று கூறிவிட்டு சென்று விட்டார். பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது ஒரு அரசு அதிகாரி அவரது கடமையை செய்ததற்கு இப்படி லஞ்சம் கேட்டு தொந்தரவு செய்கிறாரே என்று எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. எனவே அவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். மேற்படி என்னுடைய இடம்

குறித்து உண்மை தன்மை அறிக்கை அளித்ததற்காக என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் முத்துசாமிபுரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.எட்டுராஜ் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by K.சுதாகர் 24-01-2025. இணைப்பு : (1.) புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் அளித்த மனு நாள்: 26.11.2024-ன் நகல். (2.) பட்டா எண் 62-ன் நகல். (3.) முத்துசாமிபுரம் மற்றும் வடக்கு சிலுக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை நாள்: 08.01.2025-ன் நகல். Sir, Received by me on 24.01.2025 at 08.30 hrs & verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.01/2025 u/s 7(b) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 09.00 hrs. xxxxxx s/d., by J.ANITHA 24.01.2025, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

J. Anitha
24/01/25
Inspector of Police,
V&AC,
Thoothukudi.